(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **157**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 மார்ச் 24, வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

திரு. நீல் இத்தவல, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சாபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:

“பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்காக பின்வரும் விடயங்களை உங்களது தயவான கவனத்துக்கு உட்படுத்துகின்றேன்.

ஒவ்வொரு உறுப்பினரும் விவாதிக்கப்படும் விடயத்துக்குட்பட்டே தமது உரையை நிகழ்த்த வேண்டும் என்றும், உறுப்பினரெவரும் மற்றெவ்வுறுப்பினரையும் பெயரினால் குறிப்பிடுதல் ஆகாது என்றும், ஓர் உறுப்பினர் இன்னுமோர் உறுப்பினர் மீது தகாத நோக்கம் கற்பிக்க கூடாது என்றும், பாராளுமன்றத்தினுள் உரையாற்றும் போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை இச் சந்தர்ப்பத்தில் இந்த கௌரவ சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களினதும் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

எனினும் 2017 மார்ச் மாதம் 22 ஆம் திகதி உறுப்பினர்கள் சிலர் இந்த உயர் சபையின் கௌரவத்துக்கும் நன்மதிப்புக்கும் மிகவும் பாதகமான வகையில் கௌரவ பிரதமருக்கும் வேறு உறுப்பினர்களுக்கும் அநீதியான முறையில் உண்மைக்குப் புறம்பாகவும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி மிகவும் இழிவாக அவதூறு ஏற்படும் வகையில் தொடர்ந்து உரையாற்றிய அந்த சந்தர்ப்பத்துக்குரிய ஹன்சார்ட் அறிக்கை பொழிப்புக்களை ஆராய்ந்ததன் பின்னர் என்னால் அவதானிக்கப்பட்டதுடன் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் வேண்டுமென்றே மீறப்பட்டுள்ளது என்பதையும் மிகவும் கவலையுடன் அறிவிக்கின்றேன்.

அவ்வாறான செயற்பாடுகளில் உள்ள பாரதூரமான தன்மை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் மாண்புக்கு பாதிப்பேற்படுவதால் நிகழக்கூடிய பாதகமான தாக்கம் தொடர்பாக ஏற்கனவே மேற்படி உறுப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சனநாயகத்தின் உயரிய சபையாகக் கருதப்படுகின்ற சட்டவாக்க சபையினுள்ளேயே பாராளுமன்ற உறுப்பினர்களின் மாண்பு கெடும் வகையில் செயற்படுவதானது, பாராளுமன்றத்தில் நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற மரபுகள், நடைமுறைகள் மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கு முரணானதென்பதை சகல உறுப்பினர்களினதும் சிறப்புக் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

எவரேனுமொரு பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பாக எதிர்ப்பேதும் இருப்பின் பாராளுமன்ற மரபு மற்றும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்குட்பட்டதாக செயற்பட முடியுமென்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

அரசாங்க தரப்பினதும் எதிர்தரப்பினதும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த உயரிய சபையில் சகல உறுப்பினர்களினதும் கௌரவத்தை பாதுகாக்கின்ற வகையில், ஒருவர் மீது இன்னொருவர் தகாதவாறு குற்றஞ்சாட்டிக் கொள்வதையும் அவதூறு செய்வதையும் தவிர்த்து, விவாதங்களுக்கு உரிய கட்டுப்பாட்டுடன் பங்கேற்பதற்கு ஆவனசெய்தல் வேண்டுமென்பதையும், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் மரபுகளுக்கும் உட்பட்டதாக இந்த உயரிய சபையில் செயலாற்ற வேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பணம் :** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2017.02.01 முதல் 2017.02.28 ஆம் திகதி வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத்திட்டத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் வரவு செலவுத் திட்ட உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகளைச் சமர்ப்பித்து மேற்படி அக்குறைநிரப்பு ஒதுக்கீடுகளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 1987 செப்டெம்பர் 14 ஆம் திகதிய 471/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கம்பனிகள் (செயலாளர்கள் பற்றிய) ஒழுங்குவிதிகளின் 2 (i ) ( ஆ) பிரிவு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 527 ஆம் பிரிவின் கீழ் திருத்தப்பட்டு, (ix ) எனும் புதிய உப பிரிவைச் சேர்த்து, கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 20 ஆம் திகதிய 1998/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து மேற்படி ஒழுங்குவிதிகள் வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர், 2012 ஆம் ஆண்டுக்கான நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்:** போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சமல் ராஜபக்ஷ, அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம்", "1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்" மற்றும் "2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆண்டு அறிக்கை" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. மனுக்கள்:**

(1) (i) புத்தல, பெரஹெர மாவத்தை, 11 ஆம் கம்பம் எனும் முகவரியில் வதியும் திருமதி சஜீவனீ கோமஸினது 2016.08.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மஹரகம, எல்ஹேன வீதி, இல. 108/ஏ யில் வதியும் திரு. ரீ.எச். அசோக த மெல்லினது 2016.09.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா சமர்ப்பித்தார்.

(2) (i) எஹலியகொட, மோரகல, இல. 508/4 இல் வதியும் திரு. ஏ.எம்.ஐ. குமாரசிங்கவினது 2017.01.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) வத்தளை, ஹெந்தல, பள்ளியவத்த, 3 ஆம் ஒழுங்கை, இல. 26/11 இல் வதியும் திரு. கே.ஜீ.ஆர். டயஸினது 2016.12.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) தேவஹூவ, புலனவெவ பேசகர்ம நிலையத்தில் பணிபுரியும் திரு. ஆர்.எம். நிமல் சந்திரசிரியினது 2016.12.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) புவக்பிட்டிய, ஹிங்குரல, மஹவலதெனிய, இல. 54/4/ஏ யில் வதியும் திருமதி டப்ளியூ. ஆரியவதீயினது 2016.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ வாசுதேவ நாணாயக்கார சமர்ப்பித்தார்.

(3) (i) அதுருகிரிய, மிலேனியம் சிட்டி, வலய இல. 4, இல. 1036 இல் வதியும் திருமதி ஏ.ஏ. பிரியகாந்தியினது 2017.03.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) களனி, தளுகம, லும்பினி மாவத்தை, இல. 4/15 இல் வதியும் திரு. டி.எம். திசாநாயக்கவினது 2017.02.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிஹால் கலப்பத்தி சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. அனுதாபப் பிரேரணைகள்: உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,** காலஞ்சென்ற முன்னாள் பிரதம அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் அனுதாபப் பிரேணையினைச் சமர்ப்பித்தார்.

(பி.ப. 2.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார். )

மேற்படி அனுதாபப் பிரேரணை பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

**6. ஒத்திவைப்பு (சுகாதாரச் சேவையை வலுப்படுத்தல்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்குவாராக" என உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.55 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 5.26 மணிக்கு, 2017 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.